ஆத்தூர் கிராமத்திற்குப் பாசன வசதி

* 95 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் ஒன்றியம், ஆத்தூர் கிராமத்தில் உள்ள நன்செய் நிலங்களுக்கு வடிகால் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) தலப் பொறியாளர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆய்வு வேலை முடிந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விக்கிரமன் ஆற்றின் கரைகள்

* 96 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், திருமங்கலத்தில் விக்கிரமன் ஆற்றின் கரையைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விக்ரமனாற்றின் கரையை 6 ஆவது மைல் முதல் 7/1 மைல் வரை வலுப்படுத்தும்பொருட்டு ரூ. 17,200 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பெற்ற வேலை தற்சமயம் முடிவுறும் தருவாயில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியத்தில் திருமங்கலத்தில் மாப்படுகை-கலங்குடி பகுதியில் விக்கிரமன் ஆற்றின் கரை மிகுந்த சேதம் ஏற்பட்டு, அடிக்கடி பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. **அமைச்சரவர்கள்**